நூலகம் 16/2 பகுதி யாழ்ப்பாணம்

# நிவாரணநிறுத்தத்திற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

[கொழும்பு]
வடக்கு-கிழக்குப்பகுதிகளில் அகதி முகாம்களுக்கு வெளியில் இருக்கும் 10லட்சம் அகதிகளுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதை அரசு இம்மாதம் முதல் நிறுத்திய

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 31 இதழ்: 186
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16-8-1991

## யாழ். மாவட்டத்தில்
## உணவுமுத்திரை, ஜனசக்தி திட்டம் மீண்டும் அமுல்

[யாழ்ப்பாணம்]
வடமாகாணத்தில் நிறுத்தப்பட்ட இலவச உணவுமுத்திரை ஜனசக்தி திட்டங்கள் மீண்டும் விரைவில் அமுல்படுத்தப்பட இருப்பதாக, யாழ். அரச அதிபர் கா.மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அரச அதிபர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், தொழில் வாய்ப்பின்றி இருக்

(4-ம் பக்கம் பார்க்க)

## காணித்தகராறினால் வயோதிபர் வெட்டிக் கொலை

(யாழ்ப்பாணம்)
உறவினர்களுக்கிடையிலான தோட்டக்காணித் தகராறு காரணமாக ஏற்பட்டசண்டையில் வயோதிபர் ஒருவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார். இருவர் படுகாயமடைந்தனர். புத்தூர், நவக்கிரியைச் சேர்ந்த ஆறுமுகம் கைலாச

(4ம் பக்கம் பார்க்க)

## ★ வடக்கு - கிழக்கில்

# போர்ஓய்வு-பேச்சுவார்த்தை: நோர்வே மிகத்தீவிர முயற்சி

## - கிட்டு - பிரட்மன் பேச்சு -

[கொழும்பு]
வடக்கு-கிழக்கு பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கில் போர் ஓய்வொன்றை ஏற்படுத்த நோர்வே அரசு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது. இதுகுறித்து நோர்வே தரப்பினர் அரசுடன் தீவிரமாக ஆலோசித்து வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முதலில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்திப் பின்பேச்சுக்களை ஆரம்பிக்க அரசுதரப்புடன் தொடர்புகொண்டுள்ள நோர்வே பிரதிநிகள்விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் முயற்சித்துவருகிறார்களாம்.

இதன் ஒரு கட்டமாகவே புலிகளின் பிரதிநிதி திரு.கிட்டுவைச் சந்திக்க திரு. பிரட்மன் வீரக்கோன் சென்றுள்ளதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் இனப்பிரச்சினையைத் தீர்க்குமாறு பல மேற்குலக நாடுகள் அரசைத்

[4-ம் பக்கம் பார்க்க]

## திருவனந்தபுரத்தில் 21 தமிழர்கள் கைது

[சென்னை]
யாழ்ப்பாணத்தை சேர்ந்த 21 தமிழர்கள் திருவனந்தபுரத்தில் நடந்த திங்கட்கிழமை பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

திருவனந்தபுரத்தில் இரு விடுதிகளில் தங்கிருந்த போது இவர்கள் கைது செய்யப்பட்டனராம். இவர்களில் இருவர் பெண்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## முகாம்களில் இல்லாத அகதிகளுக்கும் நிவாரணம்?

(யாழ்ப்பாணம்)
இராணுவ நடவடிக்கைகளினால், தமது சொந்த இடங்களைவிட்டு அகதிகளாக வெளியேறி முகாம்களில் தங்காமல் வெளியிடங்களில் தங்கியிருப்பவர்களுக்கும் நிவாரணம் வழங்க அரசு கொள்கையளவில் இணங்கியிருப்பதாக யாழ். அரச அதிபர் கா.

(4ம் பக்கம் பார்க்க)

## நிவாரண நிறுத்தத்தை கண்டித்து
# யாழ். செயலகம் முன்னால் இன்று மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் அகதி முகாம்களில் இல்லாதோருக்கான நிவாரண உணவு விநியோகத்தை அரசாங்கம் நிறுத்தியிருப்பதைக் கண்டித்து இன்று யாழ். செயலகம் முன்னால் பெரும் மறியல் போராட்டம் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள தொழிற்சங்கள்மற்றும் சமூக

(4-ம் பக்கம் பார்க்க)

## 'தராசு' அலுவலகத்தில் கத்திக்குத்து; இருவர் பலி

[சென்னை]
தமிழகத்தின் பிரபல வார ஏடான 'தராசு' சஞ்சிகையின் அலுவலகத்தினுள் நேற்றுமுன்தினம் புகுந்த 20 பேரடங்கிய குழுவொன்று மேற்கொண்ட கத்திக்குத்து தாக்குதலில் இரு ஊழியர்கள் கொலைப்பட்டனர். தாக்குதலை நடாத்திய கோஷ்டி உடனடியாக அவ்விடத்திலிருந்து மின்னல்வேகத்தில் தப்பித்து விட்டதாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

[2 ம் பக்கம் பார்க்க]

## குமண வருகிறது

[கொழும்பு]
உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு குமண கப்பல் அடுத்தவாரம் பருத்தித்துறை துறைமுகம்வரவுள்ளது

இக்கப்பலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உணவுப் பொருட்களே பெருமளவில் வருவதாகவும் கூறப்படுகிறது.

## கிட்டுவை வெளியேற்ற வேண்டாமென
# உலகத் தமிழ் அமைப்புகள் பிரிட்டனிடம் கோரிக்கை

[லண்டன்]
லண்டலிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க சர்வதேசப் பிரதிநிதி கிட்டு (சதாசிவம் கிருஷ்ணமூர்த்தி) என்பவரை வெளியேற்றவேண்டாமென்று பல உலகத்தமிழ் அமைப்புக்கள் பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுதொடர்பாக இலங்கை

(4ம் பக்கம் பார்க்க)

## விரைவில் பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]
யாழ் மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவை மிக விரைவில் ஆரம்பிக்கப்பட

(4-ம் பக்கம் பார்க்க)

## கிட்டு, திலகரை சந்திக்க
# பிரட்மனுக்கு அதிகாரமில்லை

[கொழும்பு
பிரிட்டன் சென்றுள்ள திரு. பிரட்மன் வீரக்கோன் புலிகள் பிரதிநிதி திரு. கிட்டுவையோ அல்லது பாரிஸிலுள்ள திரு. திலகரையோ சந்திக்கமாட்டார். அவருக்கு இதற்கான அதிகாரம் எதுவும் இல்லை என ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நேரத்திலும் உணவு எடுத்துவர அனுமதி

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் நேரங்களிலும் உணவுப் பொருள்களை லொறிகள் மூலம் கொண்டு வருவதற்கும் அனுமதி வழங்குவதற்கும் அரசு தற்போது இணங்கியுள்ளது.

அண்மையில் கொழும்பில் யாழ். அரச அதிபருக்கும்,

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

குரக்கன் ஒட்டு தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-1502)

## ஜீவாகாரம்

இது ஓர் உள்ளூர் உற்பத்தி. இதில் தாய் - சேய்க்குரிய ஜீவ சத்துக்கள் அடங்கியுள்ளது. கிடைக்குமிடம் அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம். (ஏ-1500)

## பழைய புத்தகங்கள்

பழைய புத்ததகங்கள் சஞ்சிகைகள் விலைக்கு வாங்குவோம். புத்தகக்கடை கல்வியங்காடு. (சி-5127)

## விற்பனைக்கு

புனலைக்காய் ½ கிலோ பக்கற்றுகளில் விற்பனையாகிறது. பக்கற் விலை ரூபா 25/- மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ-1498)

க. பொ. த. சித்திரப்பாடத்தில் சிறப்புச் சித்தி பெறுவதற்குச் சித்திரம் வினாவிடை கிடைக்குமிடங்கள் அரன்ஸ், சிவாஸ், வாலாம்பிகா. ஸ்ரீலங்கா, ஆல் சிலோன், பூபாலசிங்கம், மண்டேலா, மாக்மிலன், தினேஸ் ஆகிய கடைகளில் கிடைக்கும். [சி-5092]

## ஆங்கில நூல் விற்பனை

கல்வி நிறுவனங்களுக்கும், நூலகங்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் ஏற்ற அரிய நூல்கள், நாவல், வரலாறு (அமெரிக்கா, ஐரோப்பியா, இந்தியா), தர்க்கவியல், இயக்கவியல், பௌதிகம், இராசயனவியல், உடற்கூற்றியல், மனோதத்துவயியல், முகாமைத்துவம் தத்துவம், பொருளியல், கணக்கியல், புள்ளிவிபரவியல், அரசியல் (அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்சியா, யூகோசிலாவியா, சீனா கொறியா.) கிடைக்குமிடம்: எரிக்கணேஷ், ç66, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி 5126)

## கட்டுரைப் போட்டி

பாலர் கல்வி ஆசிரியர்களுக்கான கட்டுரைப் போட்டியை வெள்ளி விழாவை முன்னிட்டு பாலர் கல்விக் கழகம் நடாத்துகின்றது. பாலர் கல்வி சம்பந்தமான 1000 சொற்களுக்கு மேற்படாத மூன்று கட்டுரைகளுக்கு பரிசில்கள் வழங்கப் படுவதுடன் வெள்ளி விழா மலரில் பிரசுரிக்கப்படும். முடிவுத் திகதி: 30-08-1991. அனுப்பவேண்டிய முகவரி: 49/5, யாழ் வீதி, யாழ்ப்பாணம். (சி 5119)

## அக்குபங்சர் ஹோமியோபதி சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டு வாதம், தொய்வு, கபாலக்குத்து. தோல் வியாதிகள், நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது மேலதிக விபரங்களுக்கு: இல. 121/2, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். இல. 95, யாழ்.வீதி, மானிப்பாய் திருமதி சத்தியமூர்த்தி, கருவேலடி புலன், கொக்குவில். (சி-5122)

## பனையால் வீழ்ந்து மரணம்

[உடுவில்]

பனைமரம் ஒன்றில் ஏறியவர் தவறி விழுந்து மரணமான பரிதாபச் சம்பவம் அளவெட்டிக் கிராமத்தில் இடம்பெற்றது.


நீலம் கணேசன் (வயது 30) என்ற தெல்லிப்பழை கோவில் புலத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு பரிதாப மரணமானவராவார். (109)

## மீனவர் பாதிப்பு

(பூநகரி)

இரணைதீவுக்கடல் பகுதியில் கடற்படையினரின் பீரங்கிப் படகுகளின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டு வருவதால் கடலுககுமீன்பிடிக்கச் செல்லும் தொழிலாளர்கள்பாதிக்கப்பட்டுள்ளனர். (23)

## முதலாம் வருட நினைவஞ்சலி



யோசப் ஞானப்பிரகாசம் (J. P.)

தோற்றம்: 19-12-1900
மறைவு: 16-08-1990

அன்பான தந்தாய்! இவ்வுலகில் பிரகாசமாய் இருந்து, வழிநடத்தி எம்மைப் பிரிந்து சென்றீர் எம் வாழ்வில் உம் பிரகாசம் என்றும் நிலைத்திட இறைவனை என்றும் இரந்து நிற்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
315, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். (சி-5124)

யாழ். நகரில்

## திருட்டு அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பகுதியில் இரவு நேரங்களில் தினமும் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை இப்பகுதி மக்கள் இரவு நேரங்களை பெரும்பீதியுடன் கழிப்பதாகக் கூறப்படுகின்றது.

ஈச்சமோட்டை, பாண்டியன் தாழ்வு, கொய்யாதோட்டம், பாஷையூர் ஆகிய இடங்களில் திருடர்கள் நடமாட்டம் இரவு நேரங்களில் அதிகரித்து காணப்படுகின்றதாம்

மேற்படிப் பகுதிகளில்உள்ள வீடுகளில் சைக்கிள்கள், வாழைக்குலைகள், கோழிகள் என்பன தினமும் களவாடப்பட்டு வருகின்றது. அண்மையில் ஈச்சமோட்டை வீதியில் உள்ள ப. நோ. கூ. ச. கிளையில் உணவுப் பொருட்களும், இதே வீதியில் வீட்டுவிறாந்தையில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றும் களவாடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினமும் மேற்படி வீட்டில் திருடுவதற்காக வீட்டின் கூரையில் பதுங்கி இருந்ததை வீட்டார் கண்டதும் திருடன் தப்பித்துக்கொண்டதாக கூறப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவங்கள் பற்றி விடுதலைப்புலிகளின் கவனத்துக்கு தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது. [வி]

# இன்று

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று 16-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

★

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர் (சம்மந்தப் பிள்ளையார்) ஆலய வருடாந்த உற்சவம் இனறு 16ந் திகதி வெள்ளி காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

★

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை காசி காண்ட மடம் சிவன்கோவிலில் இன்று 16-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் குரு பூசை நடைபெறவுள்ளது.

★

[யாழ்ப்பாணம்]

பிரசித்திபெற்ற நவாலியூர் முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

★

(மானிப்பாய்)

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 16 ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (72)

★

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் சுந்தரமூர்த்திநாயனார் குரு பூசை இன்று 16ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் திருத்தொண்டத் தொகை பாராயணமும் அதனைத்தொடர்ந்து பெரிய புராணபடனமும் நடைபெறும்.

★

(கொழும்புத்துறை)

சண்டிலிபபாய் இந்து இளைஞர் மன்றமும், சண்டிலிப்பாய் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பரிபாலன சபையும் கூட்டாக இணைந்து இன்று 16ம் திகதி வெள்ளிக்கிழமை சுந்தரமூர்த்திநாயனார் குருபூசைத்தினத்தை கொண்டாடுவதெனத் தீர்மானித்துள்ளனர். [154]

★

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலைப்புலிகளின் வெற்றிவேண்டி புதுமடத்திலுள்ள ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று 16ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனையும் பூசை வழிபாடும் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது.

★

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்வி - பத்திரிகைத்துறைபயின்றமாணவருக்கான கூட்டம் இன்று 16ம் திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களமுறைசாரக்கல்விப் பிரிவில் நடைபெறவுள்ளது.

★

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் முறைசாராக் கல்வித்திட்ட தொழிற்திறன் பயிற்சிப் போதனாசிரியர்களுக்கான அவசர கூட்டம் 16ம் திகதி காலை 9மணிக்கு கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. போதனாசிரியர் யாவரும் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்படுகின்றனர். [152]

## தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

வலிதென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் காகிதாதிகள், அச்சிட்ட படிவங்கள் பதிவேடுகள் ஆகியனவற்றிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மடுவில் குழப்பமின்றிப் பரீட்சை நடைபெறுகிறது

(மன்னார்)

மடுத் தேவாலயத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எதுவித இடையூறுகளுமின்றி தற்போது நடைபெற்றுவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி பரீட்சையின் ஆரம்பநாளன்று திட்டமிட்டு பரீட்சையை குழப்பமுற்பட்ட போது விடுதலைப்புலிகள் தலையிட்டுபரீட்சையை தொடர்ந்து நடாத்துவதற்கு உதவியதாகக் கூறப்படுகின்றது.

இப்பரீட்சை தற்போது அட்டவணைப்படி அமைதியாக நடைபெற்று வருவதாகவும் தெரியவருகின்றது. (வி)

## இலவச உணவுப் பொருட்கள்

(பூநகரி)

தீவுப் பகுதிகளில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து பூநகரிக்கு அகதிகளாக வந்த மக்களுக்கு பூநகரி பல நோ. கூ. சங்க கிளைகள் மூலம் 160 குடும்பங்களுக்கு 6ஆம் கட்ட இலவச உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

## சைக்கிள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் தினமும் சைக்கிள் திருட்டு மிகமோசமாக நடைபெற்றுவருகிறது.

வீடுகளில் நுழைந்து திருடுவது, வீதியோரங்களில் நிறுத்தப்பட்ட சைக்கிள்கள் திருடுவது, பூட்டப்பட்ட நிலையில் வீட்டில் இரவுவேளையில் புகுந்து திருடுவது என தினமும் புகார் செய்யப்பட்டுவருகிறது.

சைக்கிள் திருட்டை தடுப்பதற்கு பொதுமக்களுக்கு பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டபோதும் அவர்கள்இதனை அலட்சியம் செய்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (சி)

## 'தராசு' சஞ்சிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

சென்னை எழும்பூரில் பல மாடிக்கட்டிடத்தின் 2-வது மாடியிலுள்ள தராசு' சஞ்சிகை காரியாலயத்துள் கத்தி, பொல்லுகளுடன் ஆட்டோ ரிக்‌ஷாக்களில் வந்திறங்கிய கோஷ்டி ஒன்று நுழைந்தது.

அலுவலகத்திலிருந்தவர்கள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டதுடன் பலருக்கு கத்திக்குத்தும் ஏற்பட்டது. குத்தப்பட்டவர்களில் இருவர் 2-ம் மாடிக்கட்டிடத்திலிருந்து தள்ளப்பட்டனராம்.

பத்திரிகை நிறுவனக்கணக்காளரும் மற்றொரு ஊழியரும் கத்திக்குத்தாலும், கீழே தள்ளிவிடப்பட்டதாலும் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர் நால்வர் கத்திக்குத்துக் காயங்களுக்கிலக்காகினர். பல ஊழியர்கள் ஒருவாறு அடுத்த கட்டடத்தினுள் தப்பிவிட்டனராம். மேற்படி கும்பல் அலுவலகத்திலிருந்த பொருட்களை அடித்துநொருக்கி சேதப்படுத்திவிட்டு தப்பிவிட்டதாம்.

இதேவேளை இக்கட்டிடத்தின் ஒரு பகுதியில் தமிழ்ப் போராளிக்குழு தலைவர்களில் ஒருவரான திரு. சந்திரஹாசன் இருந்ததாகவும், இவருக்கு காவலிருந்த ஆயுதம் தாங்கிய 3 பொலிஸாரில் எவரும் இந்தச் சம்பவத்தின் போது செயற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்ற சென்னை நகர பொலிஸ் கமிஷனர் மேற்படி 3 பொலிஸாரும் செயற்படாமலிருந்ததைக் கண்டித்துள்ளார். மேற்படி கும்பலை தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர்.

இத்தாக்குதலில் ஈடுபட்ட கும்பல் மதுபோதையில் இல்லாதலால் இவர்கள் வெளியிடத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாமென 'தராசு' ஆசிரியர் தெரிவித்துள்ளார். (சி)

## மண்டலாபிஷேக விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் ஒடையம்பதி அதள்மிகு ஸ்ரீகற்பக விநாயகர் கோயில் மண்டலாபிஷேக பூர்த்திவிழா நாளை 17ம்திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது

நாளை மாலை 4-30 மணிக்கு உபந்நியாசம் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தலைமையில் இடம்பெறவிருக்கிறது 'அற்புதம் நிறைந்த கற்பகக் களிறு' என்ற விடயம்தொடர்பாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் உரையாற்றவிருக்கிறார்.

கும்பாபிஷேக பிரதமகுரு நீர்வேலி பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள் தலைமையில் சிவாசாரியார்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள். (153

## இராசி பலன்

16-08-1991
வெள்ளிக்கிழமை
தமிழுக்கு ஆடி - 31

ஸப்தமி பி. இ. 2-04 வரை, சுவாதி மு. இ. 7-15 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 10-35 முதல் 12-05 வரை. சுபநேரம் காலை 6-05 முதல் 7-35 வரை. சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை.

மேடம்: வாதத்திறமை, புதுப்பொருள் சேர்க்கை, தொழில் சிறப்பு.

இடபம்: குடும்பமகிழ்ச்சி. இனசன வரவு, காரியசித்தி.

மிதுனம்: கோபமடைதல், வீண் பகை, மனக்குறை.

கடகம்; சகோதரவிரோதம், கண்ணில் ரோகம், குழப்பம்.

சிங்கம்: தொழில் லாபம், அறிஞர் பாராட்டு, தெய்வீக செலவு.

கன்னி: அநாவசிய தலையீடு. கற்பனை மிகுதி, மனக்கஷ்டம்.

துலாம்; மனைவியால் பெருமை, உறவினர் மகிழ்ச்சி, பாராட்டு.

விருச்சிகம்: மனப்போராட்டம், வசதிக்குறைவு, கடன் சுமை.

தனுசு; புதிய நட்பு, கடமையுணர்வு, குடும்பசுகம்.

மகரம்: பெண் நட்பு, வாக்கு வன்மை, தொழில் முதலீடு.

கும்பம்! முதியோர் ஆசி, தொழில்சிறப்பு, பணவரவு.

மீனம்: குடும்பகலகம், தொழில் பாதிப்பு, காரிய தடை.

- ஜோஸ்யர்

## 175-வது ஆண்டு நிறைவுவிழா

[வட்டுக்கோட்டை]

அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணம் வருகை தந்து 1991ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி 175 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

அமெரிக்கன் மிஷனின் 175வது ஆண்டு நிறைவு தினக் கொண்டாட்டங்கள் செப்டம்பர் மாதம் 21, 22, 23ம் திகதிகளில் வட்டுக்கோட்டையில் நடைபெறவுள்ளன. [139)

# ★ புலிகளின் மோட்டார் தாக்குதலினால் முதல்நாள் போரிலேயே முகாமின் மின்சார நீர் விநியோகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன

## -சார்ஜன் மேஜர் கொடமுன

(நேற்றைய தொடர்ச்சி)

(கொழும்பு)

''எம்மைக் காப்பாற்றவோ, மீட்கவோ வேறு படையினர் வரமாட்டார்கள் என்ற முடிவில் எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற நிலைக்கு வந்தோம். ஒவ்வொருவரது உயிரும் அவரவர்கைகளிலேயே தங்கியிருந்தது. முகாம் முற்றாக வெளியுலகிலிருந்து துண்டிக்கப்பட்டதாகவே கருதினோம்.

படையினர் பதட்டப்படும் வேளைகளில் எல்லாம்முகாம் தளபதி கருணாரத்ன படையினரை உற்சாகப்படுத்தி வந்தார். சகல பகுதிகளுக்கும் அவர் சென்று தளர்ந்துபோயிருந்த படையினரை உற்சாகமூட்டி வந்தார் இவ்வாறான தொரு கட்டத்தில் அவர்மருத்துவப் பிரிவிற்கும் வந்து உரையாற்றினார். ''நான் யுத்தத்தைக் கவனிக்கிறேன், நீங்கள் காயப்படுபவர்களை கவனியுங்கள்'' என்றார்.

அதன்பின் இறந்த படையினரின் சடலங்களைச் சென்று பார்வையிட்டார். அவரும் சிறிது தளர்வடைந்தார். உடனடியாக அங்கிருந்து சென்றுவிட்டார்.

### தொடர்ச்சியான தாக்குதல்

11ம் திகதி இரவு கவிந்தபின் புலிகள் தமது மோட்டார்தாக்குதலை தொடர்ச்சியாக உக்கிரமாக மேற்கொண்டனர், மோட்டார், ரொக்கட் மற்றும் அவர்களது தயாரிப்பான பசிலன்-2000, 'குமரப்பா' போன்றவற்றையும் கொண்டு கடுமையாகத் தாக்கினர். இவை மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

பாரிய வெடியுடன்தீப்பற்றி எரியும் சக்தியும் கொண்ட இவற்றில் அதிகளவு வெடிமருந்துகள் நிரப்பப்பட்டிருந்ததால் முகாம் எங்கும் தொடர்ச்சியாக பாரிய தாக்குதல்கள் நடைபெற்ற வண்ணமிருந்தது.

அதிகமான மோட்டார் குண்டுகள் தகவல் தொடர்பு அன்ரனாவையும், ரி. வி. அன்ரனாவையும் சகல பகுதிகளிலும் பதம் பார்த்தன. இதனால் இந்த தகவல்தொடர்பு கோபுரங்கள் பலத்த சேதமடைந்தன.

### மருத்துவ பிரிவுக்கு

இத்தாக்குதல்களினால் தொடர்ச்சியாக பெருமளவு படையினர் பலத்த காயங்களுடனும் சிறிய காயங்களுடனும மருத்துவப் பிரிவிற்கு வந்த வண்ணமிருந்தனர். பலருக்கு எரிகாயங்கள் ஏற்பட்டிருந்தது.

இதற்கிடையில் இரவுவேளையில் புலிகளின் கெட்டியான முறையில் அமைக்கப்பட்ட 'புல்டோசர்கள்' தென்பகுதியிலும் தென்கிழக்கு பகுதியிலுமிருந்து முன்னேறி வந்தன இவற்றுடன் பெருமளவு புலிகள் வந்து மின்சார இணைப்பு மேடுகளையும், மின் இணைப்பு வயர்களையும் துண்டித்து பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த மின்சார தடுப்புகளை அகற்றி முன்னேறிவந்தனர்.

(ஆனையிறவு முகாம் முற்றுகையினுள் இருந்த இராணுவ மருத்துவ பிரிவைச் சேர்ந்த மேஜர் கொடமுன 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியை இங்கு தொடர்ச்சியாகத் தருகின்றோம்.)

மின்சார பாதுகாப்பு பகுதியையடுத்து முகாம் நோக்கியிருந்த பகுதியில் படையினர் பெருமளவு கண்ணிவெடிகளையும், மிதிவெடிகளையும் பாதுகாப்பிற்காக புதைத்திருந்தனர். புலிகள் இவற்றையும் அகற்றியவண்ணம் முன்னேறினர்.

இந்த நேரமெல்லாம் தொடர்ச்சியாக விமானங்கள் கடுமையாக தாக்கிய வண்ணமிருந்தன. இவற்றுக்கு எதிராகவும் புலிகள் தொடர்ச்சியாக தாக்கியவாறும், முகாமை நோக்கியும் உக்கிரமாக தாக்கியவாறு இருந்தனர்.

### எதிர்த்தாக்குதல்

புலிகளை முன்னேறவிடாது முகாமிலிருந்து படையினர் விமானப் படையின் உதவியுடன் கடுமையாக எதிர்த்தாக்குதலை தொடுத்த வண்ணமிருந்தனர் விமானப்படை விமானங்கள் குண்டுமாரியை பொழிந்த வண்ணமே இருந்தன

இத்தாக்குதலில் புல்டோசர் சேதமாகியிருக்க வேண்டும். படையினரும் புலிகளும் பெரும் போரையே நடாததிக் கொண்டிருந்தனர். விமானத் தாக்குதலால் முன்னேறிய புல்டோசர் சேதமடைந்து அப்பகுதியில் புதைந்திருக்கவேண்டும்.

### நீர்விநியோகம் தடைப்பட்டது

இதற்கிடையில் முதல்நாள் போரிலேயே புலிகளின் தாக்குதலால் முகாமின் மின்சார விநியோகமும், நீர் விநியோகமும் முற்றாக தடைப்பட்டது. இது எமக்கு பெரும் அச்சத்தையும் நெருக்கடியையும் தோற்றுவித்தது. வேறு இரு ஜெனரேட்டர்கள் தொழிற்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அவை வேறு தேவைக்கு அவசியமாயிருந்தது.

இவ்விரு ஜெனரேட்டர் மூலமே முகாமிற்கு வெளியேயான தொலைத்தொடர்பையும், வானொலி தொடர்பையும் தொடர்ந்தும் பெறக் கூடியதாயிருந்தது.

### காயமடைந்தோர் அதிகரிப்பு

யுத்தமும் உக்கிரமாக நடந்தவண்ணமிருந்தது. காயமடைந்து வருவோரின் தொகையும் அதிகரித்துக் கொண்டே சென்றது பலருக்கு மிகமோசமான காயம் ஏற்பட்டு அவ்வவ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டுவருவது மிகக்கடினமாயிருந்தது. காயமடைந்த சிலர் மயக்கமுற்றிருந்தனர்.

இந்த நிலையில் கால், கைகளில் படுகாயமடைந்தவர்களுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டியதொரு இக்கட்டான நிலை ஏற்பட்டது ஆனால் அதற்குரிய சாதனம் எதுவும் எம்மிடம் இருக்கவில்லை. ஒரே ஒருவழிதான் இருந்தது.

[தொடரும்]

# ஈழத்தமிழரை துன்புறுத்தி தாமாகவே திரும்பசெய்வது தமிழக அரசின் திட்டம்

## நாடுதிரும்பியவர் தரும் அதிர்ச்சித் தகவல்

இந்திய மத்திய அரசைக்காட்டிலும்தமிழக பொலிசார் இலங்கைத் தமிழரைத் தாக்குவதிலும் வெளியேற்றுவதிலும் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

''தமிழ்நாட்டில்

முதலமைச்சரின்

ஆதரவாளர்களும்,

பொலிஸாரும்

ஈழத் தமிழரைத்தாக்கி

வருகினறனர்''

திருச்சியில் வைத்துதமிழகப் பொலிசாரால் தாக்குதலுக்குள்ளான இலங்கைத் தமிழரானஎ.ஸ் புவனேஸ்வரன் 'ஈழநாடு' நிருபருக்கு அளித்தபேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் நாட்டில்முதலமைச்சரின் தீவிர ஆதரவாளர்களும் தமிழகப் பொலிசாருமே இலங்கைத் தமிழரை அச்சுறுத்தியும் தாக்கியும் வருகின்றார்கள்.

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள்ல் தமிழக அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு பதிவு செய்தவர்களும் சரி பதிவுசெய்யப்படாதவர்களும் சரி தமிழக அரசின் துன்புறுத்தலுக்கு ஆளாகியே வருகின்றார்கள். வீடுகளில் உள்ளவர்கள் கூட ஒவ்வொரு நிமிடமும் பயத்துடனே வாழ்கிறார்கள். திடீர் திடீர் என்று பொலிசார் வருவதும் இலங்கைத்தமிழர்களையும் பிடித்துச் சென்று தாககுவது வழக்கமாகிவிட்டது.

இவர்களுக்குத் துன்புறுத்தல் கொடுத்து தாமாகவே இலங்கைககுத திரும்ப வைப்பதும் தமிழகஅரசின ஒரு திட்டமாக உள்ளது. இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு உணவு முதல் பல விடயங்களில் தற்போது கட்டுப்பாடு போடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களை தமிழக பொலிஸார் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று அங்கு மூர்க்கத்தனமாக ரத்தம்சிந்த தாக்கிய சம்பவங்கள் தமிழக மக்களைக்கூடக் கண்ணிர்விடச் செய்துள்ளது.

நானும் எனது நண்பன் கண்ணனும் திருச்சியில் தங்கியிருந்தபோது திடீரென வந்த பொலிசார் புலிகள் நடமாட்டம் பற்றிக்கேட்டதோடு தங்கள் இருவரையும்பொலிஸ்நிலையம்கூட்டிச் சென்றுமூர்சிசையாகும் வரை தாக்கினார்கள். பின்னர் எங்களை விடுதலை செய்து உடனடியாக இலங்கை செல்ல நிர்ப்பந்தித்தார்கள்.

## ''அகதி முகாம்களில் உணவுக்குக் கட்டுப்பாடு''

இலங்கைத் தமிழரின் பாஸ்போட் விஸா போன்றவற்றைப் பொலிஸார் பறிமுதல் செய்துவருவதுடன் அவர்களை அனுப்பும் விடயத்தில் அதிகமும்முரம் காட்டியும் கெடுபிடி செய்தும் வருகின்றனர். இதனால் இலங்கைத் தமிழர்கள் அச்சுறுத்தல் மத்தியில் பயத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

முதலமைச்சரின் கண்டிப்பான உத்தரவே இலங்கைத் தமிழர் மீது தாம் மேற்கொள்ளும் கெடுபிடிகளுக்குக் காரணம் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இலங்கை செல்ல விரும்புபவர்கள் யாராயினும் அவர்களைப் பலவித விசாரணைக்குட்படுத்தியபின் விமான நிலையம்வரை அவர்களுடன் பொலிஸார் சென்று அனுப்பி வருகின்றார்கள். இதேபோன்று என்னையும் பொலிஸார் இலங்கைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கே பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மிருகத்தைவிடக் கேவலமாக நடாத்துகின்றார்கள்.

நாகபட்டினம், திருச்சி, மதுரை போன்ற இடங்களில் மிகமோசமாக இலங்கைத் தமிழர்கள் தாக்கடபட்டுவருகின்றார்கள். கடற்பிராந்தியத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதோடு தமிழக முதலமைச்சர் தனது பாதுகாப்பிற்காக தனது வீட்டைச்சுற்றியுள்ள ஏழைகளின் வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளார். அவர்களுக்கு மாற்றீடாக வீட்டு வசதி செய்துகொடுக்காமையினால் அவர்களில் பலர் நடு வீதியில் தவிக்கின்றார்கள்.(51)

## ''ஈழத்தமிழர்கள் நாகபட்டினம், மதுரை, திருச்சியில் மோசமாக தாக்கப்படுகிறார்கள்

### நமது நிருபர் எஸ். சுந்தரலிங்கம்

யாழ். வல்வையைச் சேர்ந்த எஸ். புவனேஸ்வரன் என்பவர் வெளிநாட்டில் பல வருடமாக வேலை செய்தவர் அண்மையில் அங்கிருந்து இலங்கை வந்து இந்தியாவைச் சுற்றிப்பார்க்க சுற்றுலா விசாவில் இந்தியா சென்று தமிழ் நாட்டில் தங்கியிருந்தபோது இவருடன் தங்கியிருந்த கண்ணன் என்பவரையும் திருச்சியில் வைத்து தமிழகப் பொலிசார் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று மூர்க்கத்தனமாகத் தாக்கி உடனடியாக இலங்கைக்குச் செல்லுமாறும் வற்புறுத்தினராம்.

எஸ் புவனேஸ்வரன்மேலும் கூறியதாவது:

## முதலுதவி சிகிச்சை முகாம்

[பண்டத்தரிப்பு]

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சென்; ஜோன் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் ஆலய வீதியில் உற்சவ காலம் முடிவடையும் வரை செயற்படவுள்ளது.

வீதி ஒழுங்கு போன்ற கடமைகளில் படையின் ஆண், பெண் தொண்டர்கள் ஈடுபடவுள்ளார்கள் என்று படையின் வடமாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார். (72)

## நிரந்தர ஊழியர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையில் நீண்டகாலமாகத் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றியவர்கள் நிரந்தர ஊழியர்களாக நியமனம் பெறுவார்கள்.

1989-ம் ஆண்டுக்கு முன்னர் தற்காலிகமாகக் கடமையாற்றி வரும் ஊழியர்களை நிரந்தரமாக்கும்படியும், இனிமேல் எந்த ஒரு ஊழியரையும் தற்காலிகமாகச் சேவைக்கு அமர்த்த வேண்டாமென்றும். சுற்றுநிருபத்தின் மூலம் கேட்கப்பட்டுள்ளது; (வி)

## சவர்க்காரத்துக்கு மிகச்சிறந்த பதிலீடு

செவ்வரத்தம் இலையை நன்றாக அரைத்து சாற்றுடன் நீரைக் கலந்தெடுத்த திரவத்தில் சிறிது நேரம் நீரில் ஊறிய அழுக்குத் துணிக்கு இட்டு நன்றாக ''பிறசால்'' அல்லது தென்னம் தும்பால்தேய்த்துமெதுவாக கல்லில் அடித்து நன்றாக கசக்கிப் பிழிந்தால் நுரையுடன் அழுக்குத் இலகுவில் துணியில் இருந்து வெளியேறி விடும்.

பின்பு துணியை இரண்டு அல்லது மூன்று தடவை புதிய நீரில் நன்றாகஅலம்புதல் வேண்டும். ஒரு சேட்டை தோய்ப்பதற்கு ஒருபிடி இலை போதுமானது.

ஜெ. யோக மனோகரன்
சுண்டுக்குழி
யாழ்ப்பாணம்;

# கச்சதீவை திரும்பப்பெற

## மத்திய அரசை வற்புறுத்துவேன்! - ஜெயலலிதா

(சென்னை)

கச்சத்தீவை மீண்டும் இலங்கையிடமிருந்துபெற்றுக்கொள்ளத் தமிழக மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தும் என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

இந்தியாவின் 45வது சுதந்திர தினவைபவத்தையொட்டி சென்னை புனித ஜோர்ஜ்கோட்டையில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேலும் கூறியதாவது:

ராமேஸ்வரம் மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டதற்கு கச்சத்தீவு நம் கைகளை விட்டுப்போனதும் ஒரு காரணமாகும்.

மீன்பிடி வலைகளை விரிக்கக் கூட இடமில்லாமல் தவிக்கும் மீனவர்களின் நலனுக்காக இந்த தீவை மீண்டும் பெறுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

தமிழ் நாட்டில் ஊடுருவி பொது அமைதிக்கு பங்கம் விளைவித்து வந்த வெளிநாட்டு தீவிரவாதிகள்மீது காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இலங்கைப் போராளிகளை கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக தமிழக மீனவர்கள் சில சிரமங்களுக்குள்ளாகின்றனர் என்றார்.

## வெற்றிடங்களை நிரப்ப அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அரச நிறுவனங்களில் காலியாக இருக்கும் வெற்றிடங்கள் மிக விரைவில்நிரப்பப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச நிறுவனங்களில் 500க்கும் மேற்பட்டலிகிதர்களின் இடங்கள் காலியாக இருப்பதாகவும் அவற்றை மிக விரைவில் நிரப்புவதற்கான ஆயுத்தவேலைகளை யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தற்போது மேற்கொண்டுள்ளார்.

## நிவாரணநிறுத்தத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை நிறுவனங்களினால் இந்த மறியல்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இன்று காலை எழுமணிக்கு ஆரம்பமாகும் இந்த மறியல் போராட்டத்தினால் யாழ். செயலகம் ஸ்தம்பிக்கவுள்ளது.

மறியல் போராட்டத்தின் இறுதியில் உணவு நிவாரணம் நிறுத்தியமையை கண்டித்தும், வடபகுதிக்கு எடுத்துவர பல அத்தியாவசியப் பொருள்களுக்கு தடைவிதித்தமையை எதிர்த்தும் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவுளளது.

இம்மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

## ஊரடங்கு நேரத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்காவுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

வடபகுதியில் திடீர் திடீரென ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதால், உணவுப் பொருள்களுக்குப் விலைவாசிகளும் அதிகரித்துக் காணப்படுவதால், வறிய மக்கள் பாதிக்கப்படுவது குறித்து யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பிரதமருக்கு வலியுறுத்தியதாகவும், அதை ஏற்றுக்கொண்ட பிரதமர் பாதுகாப்பு அமைச்சுடன் ஆலோசித்து மிக விரைவில் நல்லமுடிவு தெரிவிப்பதாகவும் கூறினார். (வி)

## கிட்டு-திலகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லண்டன் சென்றுள்ள திரு. பிரட்மன் வீரக்கோன் திரு. கிட்டுவை அல்லது திரு. திலகரைச் சந்திப்பாரென சென்னை 'இந்து' பத்திரிகை வெளியிட்ட தகவலை 'ஐலன்ட்' பத்திரிகை பிரசுரித்திருந்தது.

இச்செய்தியை வன்மையாக மறுத்துள்ள ஜனாதிபதி செயலகம் புலிகளுடன் பேச்சுவார்த்தை எதனையும் மேற்கொள்ள திரு. வீரக்கோன் லண்டன் செல்லவில்லை. தனிப்பட்ட முறையிலான விஜயமொன்றை மேற்கொண்டே அவர் லண்டன் சென்றுள்ளார்.

புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச அவருக்கு அதிகாரம் இல்லை. அதற்கான அதிகாரத்தையும் அரசு வழங்கவில்லை என்றும் இந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்காஇராணுவத்துடன் கடைக்காட்டுப்பகுதியில் கடந்தமாதம் 22-ம் திகதி நடைபெற்ற நேரடிமோதலில் வீரமரணமடைந்த கப்டன் அரசன் (சோமசுந்தரம் யோகரத்தினம்- அரியாலை). ஆனையிறவு முகாம் பகுதியில் நடைபெற்ற மோதலில் கடந்த மாதம் 10-ம் திகதி வீரமரணமடைந்த வீரவேங்கை திலகன் (திருச்செல்வம் கஜேந்திரன், யாழையூர்) ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

## புதுப்பிக்க தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

20-06-91 லிருந்து 14-07-91 வரை வடபகுதிக்கு வெளியே செல்வதற்கென வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி அட்டைகள் 20-08-91க்குமுன் வடபகுதியை விட்டு வெளியே செல்வதற்குப் பயன்படுத்துவதற்குமீளப்புதுப்பிக்கத்தேவையில்லை என்று தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

## வடக்கு - கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் வற்புறுத்தி வருவதுடன் யுத்த நிறுத்தம் ஒன்றினை ஏற்படுத்த இந்த நாடுகளும் முயற்சித்துவருகின்றன.

ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு பேச்சுவார்த்தை நடைபெறுவதை இராணுவ தரப்பு உன்னிப்பாகக் கவனிக்குமென்றும், பேச்சுக்கள் தோல்வியுறும் பட்சத்தில் யாழ். குடா மீது இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளப் படையினர் முயல்வார்களெனவும் அச்செய்திகள் தெரிவித்துள்ளன. (சி)

## கிட்டுவைவெளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட உலகின் பல பாகங்களிலுள்ள தமிழ் அமைப்புகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு தந்திகள் அனுப்பிவைத்துள்ளன.

பிரிட்டனிலிருந்து கிட்டுவை வெளியேற்றுவது தொடர்பான செய்திகள் வெளியான அன்றுதொடக்கம் இன்று வரை பெருமளவிலான தந்திகள் பிரிட்டனில் குவிந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நிலத்தினடியிலிருந்து வள்ளம் மீட்பு

(மன்னார்)

தலைமன்னாரில் ஊர்மனை கடற்கரையில் நிலத்தினடியில் இருந்து வெடி கருவிகளுடன் வள்ளம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வள்ளத்தில் 95 கொள்கலன்களில் அடைக்கப்பட்டிருந்த ஒயிலும் 15 பெரிய பெட்டிகளிலும் 25 சிறிய பெட்டிகளிலும் வைக்கப்பட்டுண்டு தயாரிப்பிற்கான கருவிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பல.நோ. கூ. சங்க தலைவர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (வி)

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா நடைபெற்று அடுத்த மாதம் 1ம் திகதி தேர் உற்சவமும், 2ம் திகதி தீர்த்தோற்சவமும், 3ம் திகதி திருக்கல்யாணமும் நடைபெறும். (சி)

## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக வாசலில் இன்று காலை 7மணிக்கு இடம்பெறும் மறியல் போராட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு யாழ். குடா நாட்டிலுள்ள சகல வர்த்தக ஊழியர்களும் இன்று காலை 6 மணிக்கு வடபிராந்திய வர்த்தக ஊழியர்சங்க பணிமனையில் தவறாது ஒன்று கூடுமாறு சங்க பொதுச்செயலாளர் கோரியுள்ளார்.

## முகாம்களில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டநிலைமைபற்றி யாழ். அரச அதிபர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எடுத்துக் கூறியதையடுத்து அவசர மகாநாடு ஒன்றை உடன் கூட்டுபடிபிரதமமந்திரிக்கு ஜனாதிபதி பணித்திருந்தார்.

பாராளுமன்றக் கட்டிடத்தில் பிரதம மந்திரி திரு. டி. பி. விஜயதுங்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. மகாநாட்டில் பல உயர் அதிகாரிகளும்கலந்துகொண்டனர்.

இடவசதியின்மையால் அகதிகள், முகாம்களை விட்டு வெளியேறி, உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் இலவச நிவாரணத்தை வழங்குவதற்கு அரசு கொள்கையளவில் சம்மதம் தெரிவித்துள்ளது மேற்படி அகதிகள் பற்றிய முழு விபரமும் அரசுக்கு தெரிவிக்கப் பட்டவுடன் நிவாரணத்துக்கான அனுமதி கிடைக்கும் என்றும் அவர் கூறினார். (வி)

## இராணுவத்திற்கு சாவகச்சேரி நோக்கி நகரும் எண்ணமில்லை

(கொழும்பு)

"ஆனையிறவு ராணுவ முகாமைப்பற்றிய இராணுவத்தினருக்கு சாவகச்சேரி நோக்கி நகரும் எண்ணம் தற்போதைக்கு இல்லை" என்று கொழும்பில் ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: ஆனையிறவிலிருந்து வடக்குப பக்கம்நகருவதாயின் அது அங்குள்ள தரைப்படையினரே சொல்ல வேண்டும். அது சாத்திமா அல்லது இல்லையா என்பதும் அவர்களே தீர்மானிக்க முடியும்.

புவியியல் அமைப்புப்படி ஆனையிறவு முகாம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதை நாம் கைவிட மாட்டோம். விடுதலைப் புலிகள் ஆனையிறவில் ஒவ்வொரு 100 மீற்றர் இடைவெளியிலும் 10 கிலோ மீற்றர் தூரம் வரைகாப்பரண்களும் கிடங்குகளும் அமைத்து இருந்தனர்.

தற்போது புதிதாக சென்ற படையினரே அங்கு உள்ளனர் முன்னர் முகாமினுள் சிக்குண்டிருந்த 800 ராணுவத்தினரும் மீட்கப்பட்டு வேறுஇடங்களுக்குமாற்றப்பட்டுள்ளனர்என்றார். (பூ)

## வர்த்தகர்கள் கைது

(வவுனியா)

வவுனியாவில் இரு தமிழ் வர்த்தகர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்தில் கைது செய்யப்பட்டவர்கள் கொடுத்த தகவலின் பேரில் இவ்விருவர்த்தகர்களும் கைது செய்யப்பட்டனராம் (சி)

## நிவாரண நிறுத்தம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு 12 எதிர்க்கட்சிகள்கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

அரசினுடைய இந்த செயல் மனித உரிமைகளை மீறும் செயல் என்றும், போஷாக்கின்மையை உருவாக்கும் என்றும் எதிர்க்கட்சிகள் மேலும் தெரிவித்துள்ளன. (153)

## திருவனந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தகுந்த பயண தஸ்தாவேஜுகள் இல்லையென காரணம் காட்டியே இவர்களை கைதுசெய்யப்பட்டனராம். (சி)

## விரைவில் பஸ்சேவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவைகளை யாழ். மாவட்டத்துக்குள் நடாத்துவதற்கு வேண்டிய எரிபொருட்கள் இன்னும் ஒரு மாதத்துக்குள் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (வி)

## காணித் தகராறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை (65 வயது)என்பவரே இச்சம்பவத்தில் கொலைசெய்யப்பட்டவராவர். இவரது பிள்ளைகளான தவேந்திரன் (20-வயது) அற்புதமலர் (25-வயது) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

நேற்றுக் காலை 7-15 மணியளவில் கொலை செய்யப்பட்டவரும், அவரது பிள்ளைகளும் தோட்டவேலை செய்துகொண்டிருக்கையில் கோடரி, கத்தி போன்ற ஆயுதங்களுடன் வந்த இவர்களது உறவினர்கள் கடுமையாக நடத்திய தாக்குதலினால் தந்தை ஸ்தலத்திலே கொல்லப்பட்டார் பிள்ளைகள் இருவரும் காயமடைந்தனர்.

கொலையுண்டவரின் சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைப் பிரேதஅறையில் நேற்று வைக்கப்பட்டது (56)

## யாழ். மாவட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவந்த உணவு முத்திரை திட்டம் கடந்த 7 மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது இத்திட்டத்தை மீண்டும் அமுல்படுத்த அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இதன்பிரகாரம் மேற்படி குடும்பங்களுக்குபுதிய உணவு முத்திரைகள் விரைவில் வழங்கப்படும்.

இதே போன்றே ஜனசக்தி உதவிகளைப் பெற்று வந்த குடும்பங்களுக்கும் அவர்களின் தற்போதைய நிலைபற்றி மீள் பரிசிலனை செய்ததபின்பு இத்திட்டமும் அமுல்படுத்தப்படும் என்றும் கூறினார். (வி)

## மரண அறிவித்தல்

### திரு. M. S. ஐயாத்துரை

(முன்னாள் வர்த்தகர், சங்கானை)

சங்கானையைச் சேர்ந்த M. S. ஐயாத்துரை அவர்கள் 15-08-91ல் காலமானார். இவர் காலம் சென்ற பூமணி அவர்களின் அன்புக் கணவரும், திலகேந்திரன் (பிரான்ஸ்), சுப்பிரமணியம் (கியூபா) அவர்களின் அன்புத் தந்தையும், சந்திரகுமாரி (பிரான்ஸ்)யின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-08-91 இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் சங்கானையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை வழுக்கியாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்;
க. தியாகராசா
(மைத்துனர்)
(சி-5128)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number D/[illegible]